C தனியே அவ்வேலையை முடிக்க 9 நாட்கள் ஆகும்.

**47. ஒன்றுக்கொன்று சமமில்லா வித்தியாசமான விலைகளை கொண்ட ஐந்து பொருள்கள் A, B, C, D மற்றும் E. C-ன் விலை ₹ 100 ஆகும். A-ன் விலை C-ஐ விட குறைவு ஆனால் B-ஐ விட அதிகம். E-ன் விலை C-ஐ விட அதிகம் ஆனால் D-ஐ விட குறைவு எனில் இவற்றுள் மிகவும் அதிக விலை உள்ள பொருள் எது ?**

**A)** B **B)** C

**C)** D **D)** E

**விளக்கம் :** **விடை : (C)**

**i.** A–இன் விலை C ஐ விட குறைவு ஆனால் B–ஐ விட அதிகம்

C = 100

C > A > B ........(1)

**ii.** E-இன் விலை C ஐ விட அதிகம் ஆனால் D–ஐ விட குறைவு

D > E > C > A > B ........(2)

எனவே இதில் அதிகம் விலை உள்ள பொருள் D ஆகும்.

**48. கொடுக்கப்பட்டவட்டவரைபடமானது ஒரு குடும்பத்தின் ஒரு வருட செலவினம் மற்றும் சேமிப்பைக் காட்டுகிறது. அக்குடும்பத்தின் மொத்த வருமானம் ₹ 75,000. எனில் கல்விக்காக செலவிடப்படும் தொகை**




**A)** ₹ 7,500 **B)** ₹ 8,000

**C)** ₹ 8,500 **D)** ₹ 9,000

**விளக்கம் :** **விடை : (D)**

மொத்த வருமானம் = ₹ 75,000

கல்விக்காக 12% செலவிடப்படுகிறது.

கல்விக்காக செலவிடப்படும் தொகை $= 750\cancel{00} \times \frac{12}{1\cancel{00}}$

கல்விக்காக செலவிடப்படும் தொகை = ₹ 9000

**49. மதிப்புக் காண் : $\sqrt{58+\sqrt{31+\sqrt{21+\sqrt{11+\sqrt{25}}}}}$**

**A)** 7 **B)** 8

**C)** 9 **D)** 6

**விளக்கம் :** **விடை : (B)**

$\sqrt{58+\sqrt{31+\sqrt{21+\sqrt{11+\sqrt{25}}}}}$ ; $\because \sqrt{25} = 5$

$= \sqrt{58+\sqrt{31+\sqrt{21+\sqrt{11+5}}}}$ ; $\because \sqrt{16} = 4$

$= \sqrt{58+\sqrt{31+\sqrt{21+4}}}$ $\because \sqrt{25} = 5$

$= \sqrt{58+\sqrt{31+5}}$ $\because \sqrt{36} = 6$

$= \sqrt{58+6} = \sqrt{64} = 8$

**50. X–இன் வருமானத்தில் 5% ஆனது Y–இன் வருமானத்தில் 15%–க்கு சமம். 10% y–இன் வருமானம் 20% Z–இன் வருமானத்திற்குச் சமம். இங்கு Z–இன் வருமானம் ₹ 3,000 எனில், X, Y மற்றும் Z–இன் மொத்த வருமானம்**

**A)** ₹ 18,000 **B)** ₹ 12,000

**C)** ₹ 27,000 **D)** ₹ 16,000

**விளக்கம் :** **விடை : (C)**

Z–ன் வருமானம் ₹ 3,000

10% *Y*–ன் வருமானம் = 20% Z–ன் வருமானம்

20% Z–ன் வருமானம் $= \frac{20}{100} \times 3000$ = ₹ 600

10% Y–ன் வருமானம் = ₹ 600

∴ Y–ன் வருமானம் = ₹ 6000

*X*–ன் வருமானத்தில் 5% ஆனது *Y*–ன் வருமான 15% க்குச் சமம்

*Y*–ன் வருமானத்தில் 15% $= \frac{15}{100} \times 6000$ = ₹ 900

*X*–ன் வருமானத்தில் 5% = ₹ 900

∴ *X*–ன் வருமானம் $= \frac{900 \times 100}{5}$ = ₹ 18,000

*Y*–ன் வருமானம் = ₹ 6,000

Z–ன் வருமானம் = ₹ 3,000

மொத்த வருமானம் = ₹ 27,000



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

# பொது நுண்ணறிவு மற்றும் காரணமறிதல்
(GENERAL INTELLIGENCE & REASONING)

## Verbal

1. மாறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்
2. விடுபட்ட எண்கள்
3. தொடர்களை பூர்த்தி செய்யும் திறன்
4. குறியீடு - மறுகுறியீடு
5. ஒப்புமைத் திறனறிதல்
6. கணிதக் குறியீடுகளின் இடமாற்று முறை
7. திசையறியும் திறன்
8. தரவரிசை
9. வென்படங்கள்
10. பகடைக் கணக்கு
11. இருக்கை அமைப்பு முறை
12. இரத்த உறவுகள்
13. வரைபட எண்ணிக்கை
14. ஆங்கில எழுத்துகளின் வரிசை முறை
15. சொல் உருவாக்கம்
16. விடுபட்ட எழுத்துகள்
17. பகுப்பாய்வு திறன்
18. சமன்பாடுகள்
19. தர்க்கவியல் திறன்

## Non-Verbal

1. ஒப்புமை அறியும் திறன்
2. தொடரைப் பூர்த்தி செய்யும் திறன்
3. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்
4. ஒத்த தன்மையுடைய வடிவ அமைப்புகள்
5. வகைப்படுத்துதல்
6. கண்ணாடி பிம்பம், நீர் பிம்பம்

www.surabooks.com

www.surabooks.com

# VERBAL

# 1 மாறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்

**Directions (1 - 20) : கீழ்க்கண்ட வினாக்களில் மாறுபட்ட எண்ணைத் தேர்ந்தெடுக்கவும்**

1. A) 24 – 42  B) 36 – 63
C) 37 – 73  D) 35 – 51  **விடை : D**
**விளக்கம் :**
ஏனையவற்றில் முதல் எண்ணின் இலக்கங்கள் இடம் மாறி அமைந்துள்ளன.
$24 \rightarrow 42$ ; $36 \rightarrow 63$ ; $37 \rightarrow 73$

2. A) 4 – 7  B) 7 – 16
C) 17 – 36  D) 16 – 32  **விடை : D**
**விளக்கம் :**
16 – 32 மட்டுமே இரட்டைப்படை எண்கள். ஏனையவற்றில் ஒற்றைப்படை, இரட்டைப்படை எண்கள் இரண்டும் அமைந்துள்ளன.

3. A) 27 – 57  B) 63 – 18
C) 28 – 81  D) 36 – 96  **விடை : C**
**விளக்கம் :**
$57 - 27 = 30$ ; $63 - 18 = 45$
$\boxed{81 - 28 = 53}$ ; $96 - 36 = 60$
53–ஐத் தவிர ஏனைய மூன்று எண்களும் (30, 45, 60) 5–ஆல் வகுபடும்.

4. A) 51 – 28  B) 37 – 62
C) 104 – 81  D) 99 – 76  **விடை : B**
**விளக்கம் :**
$51 - 28 = 23$ ; $\boxed{37 - 62 = -25}$
$104 - 81 = 23$ ; $99 - 76 = 23$

5. A) 111 – 11  B) 15 – 105
C) 7 – 91  D) 3 – 81  **விடை : A**
**விளக்கம் :**
ஏனையவற்றில் இரண்டாவது எண் முதல் எண்ணால் வகுபடும்.
$105 \div 15 = 7$ ; $91 \div 7 = 13$ ; $81 \div 3 = 27$

6. A) 2 – 4  B) 6 – 36
C) 7 – 35  D) 9 – 81  **விடை : C**
**விளக்கம் :**
ஏனையவற்றில் இரண்டாவது எண் முதல் எண்ணின் வர்க்கமாகும்.
$2^2 = 4$ ; $6^2 = 36$ ; $9^2 = 81$

7. A) 7654  B) 4567
C) 9876  D) 4321  **விடை : B**
**விளக்கம் :**
ஏனையவற்றில் எண்கள் இறங்கு வரிசையில் உள்ளன.
$4567 \rightarrow$ எண்கள் ஏறுவரிசையில் உள்ளன.

8. A) 63, 18  B) 29, 46
C) 47, 34  D) 28, 41  **விடை : C**
**விளக்கம் :** [∵ R.O → Reverse order ]
$63 \xrightarrow{R.O} 36$ ; $36 \div 2 = 18$
$29 \xrightarrow{R.O} 92$ ; $92 \div 2 = 46$
$28 \xrightarrow{R.O} 82$ ; $82 \div 2 = 41$
$47 \xrightarrow{R.O} 74$ ; $74 \div 2 = \boxed{37}$
ஆனால் 34 எனத் தவறாக அமைந்துள்ளது.

9. A) 1365  B) 5713
C) 3175  D) 7531  **விடை : A**
**விளக்கம் :**
ஏனையவற்றில் முதல் மற்றும் நான்காவது இலக்கங்களின் கூடுதல் இரண்டு மற்றும் மூன்றாவது இலக்கங்களின் கூடுதலுக்குச் சமமாகும்.
$5713 \rightarrow 5 + 3 = 8$ ; $7 + 1 = 8$
$3175 \rightarrow 3 + 5 = 8$ ; $1 + 7 = 8$
$7531 \rightarrow 7 + 1 = 8$ ; $5 + 3 = 8$
ஆனால்
$1365 \rightarrow 1 + 5 = 6$ ; $3 + 6 = 9$

10. A) 9 – 27  B) 15 – 45
C) 10 – 30  D) 20 – 60  **விடை : A**
**விளக்கம் :**
9–இன் கன எண் $27 \rightarrow 9^3 = 27$ ஏனையவற்றில் கன எண்கள் அமையவில்லை.

11. A) 2437  B) 2419
C) 5407  D) 1459  **விடை : D**
**விளக்கம் :**
$2 + 4 + 3 + 7 = 16$ ; $2 + 4 + 1 + 9 = 16$
$5 + 4 + 0 + 7 = 16$ ; ஆனால் $1+4+5+9 = 19$

12. A) 2547  B) 3456
C) 3715  D) 5678  **விடை : C**
**விளக்கம் :**
3715 – நான்கு இலக்கங்களுமே ஒற்றைப்படை எண்களாகும். ஏனையவற்றில் இரண்டு ஒற்றைப்படை எண்கள் இரண்டு இரட்டைப்படை எண்கள் உள்ளன.

13. A) 15 – 40  B) 18 – 56
C) 24 – 76  D) 12 – 28  **விடை : B**
**விளக்கம் :**
$15 \times 4 = 60$ ; $60 - 20 = 40$
$24 \times 4 = 96$ ; $96 - 20 = 76$
$12 \times 4 = 48$ ; $48 - 20 = 28$
ஆனால்
$18 \times 4 = 72$ ; $\boxed{72 - 20 = 52}$
ஆனால் 56 எனத் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

14. A) 9 – 40  B) 20 – 95
C) 17 – 80  D) 16 – 78  **விடை : D**
**விளக்கம் :**
$9 \times 5 = 45$ ; $45 - 5 = 40$
$20 \times 5 = 100$ ; $100 - 5 = 95$
$17 \times 5 = 85$ ; $85 - 5 = 80$
ஆனால்
$16 \times 5 = 80$ ; $\boxed{80 - 2 = 78}$

15. A) 1593  B) 2736
C) 2010  D) 1987  **விடை : D**
**விளக்கம் :**
ஏனைய எண்கள் 3–ஆல் முழுமையாக வகுபடும்.
$1593 \div 3 = 531$ ; $2736 \div 3 = 912$
$2010 \div 3 = 670$ ; $1987 \div 3 = 662.33$



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

www.surabooks.com



**16.** **A)** 1628 **B)** 1836
**C)** 2847 **D)** 1853 **விடை : D**

**விளக்கம் :**
ஏனையவற்றில் மூன்று மற்றும் நான்காம் இலக்கங்களின் பெருக்கற்பலன் முதலிரண்டு இலக்கங்கள் ஆகும்.
$16 = 2 \times 8$ ; $18 = 3 \times 6$ ; $28 = 4 \times 7$
$18 \neq 5 \times 3$

**17.** **A)** 34 – 15 **B)** 56 – 37
**C)** 77 – 58 **D)** 64 – 43 **விடை : D**

**விளக்கம் :**
$34 - 19 = 15$ ; $56 - 19 = 37$
$77 - 19 = 58$ ; $\boxed{64 - 21 = 43}$

**18.** **A)** 2 – 3 **B)** 3 – 7
**C)** 4 – 15 **D)** 5 – 24 **விடை : B**

**விளக்கம் :**
$2 - 3 \rightarrow (2)^2 - 1 = 4 - 1 = 3$
$4 - 15 \rightarrow (4)^2 - 1 = 16 - 1 = 15$
$5 - 24 \rightarrow (5)^2 - 1 = 25 - 1 = 24$
ஆனால், $3 - 7 \rightarrow (3)^2 - 2 = \boxed{9 - 2 = 7}$

**19.** **A)** 121 **B)** 289
**C)** 441 **D)** 361 **விடை : C**

**விளக்கம் :**
$\sqrt{121} = 11$, $\sqrt{289} = 17$
$\sqrt{361} = 19$. $\sqrt{441} = 21$
11, 17, 19 ஆகிய மூன்றும் பகா எண்கள்.

**20.** **A)** 7 – 56 **B)** 8 – 64
**C)** 3 – 24 **D)** 9 – 81 **விடை : D**

**விளக்கம் :**
ஏனையவை 8–இன் பெருக்கற்பலன்களாகும்.
$7 \times 8 = 56$ ; $8 \times 8 = 64$ ; $3 \times 8 = 24$
ஆனால், $81 = 9 \times 9$

Directions (21 - 30) : **கீழ்க்கண்ட வினாக்களில் மாறுபட்ட எழுத்தைத் தேர்ந்தெடுக்கவும்.**

**21.** **A)** MNW **B)** OPY
**C)** JKT **D)** GHO **விடை : D**

**விளக்கம் :**
$M \xrightarrow{+1} N \xrightarrow{+9} W$ ; $O \xrightarrow{+1} P \xrightarrow{+9} Y$
$J \xrightarrow{+1} K \xrightarrow{+9} T$ ; $\boxed{G \xrightarrow{+1} H \xrightarrow{+7} O}$

**22.** **A)** PRW **B)** CDJ
**C)** EFG **D)** LMH **விடை : C**

**விளக்கம் :**
ஏனையவற்றில் எழுத்துகள் ஆங்கில அகரவரிசைப்படி அமையவில்லை.

**23.** **A)** ACCUSE **B)** OPAQUE
**C)** ASSUME **D)** ANIMAL **விடை : D**

**விளக்கம் :**
ஏனையவற்றில் கடைசி எழுத்து ஆங்கில உயிரெழுத்து (vowel) ஆகும்.

**24.** **A)** EGF **B)** BDC
**C)** MQO **D)** JLK **விடை : C**

**விளக்கம் :**
$E \xrightarrow{+2} G \xrightarrow{-1} F$ ; $B \xrightarrow{+2} D \xrightarrow{-1} C$
$\boxed{M \xrightarrow{+4} Q \xrightarrow{-2} O}$ ; $J \xrightarrow{+2} L \xrightarrow{-1} K$

**25.** **A)** ET **B)** VC
**C)** RG **D)** UH **விடை : D**

**விளக்கம் :**
ஆங்கில அகர வரிசைப்படி,
$E \rightarrow 5 + T \rightarrow 20 = 25$
$V \rightarrow 22 + C \rightarrow 3 = 25$
$R \rightarrow 18 + G \rightarrow 7 = 25$
ஆனால், $U \rightarrow 21 + H \rightarrow 8 = \boxed{29}$

**26.** **A)** DFH **B)** ILP
**C)** GJN **D)** QTX **விடை : A**

**விளக்கம் :**
$\boxed{D \xrightarrow{+2} F \xrightarrow{+2} H}$ ; $I \xrightarrow{+3} L \xrightarrow{+4} P$
$G \xrightarrow{+3} J \xrightarrow{+4} N$ ; $Q \xrightarrow{+3} T \xrightarrow{+4} X$

**27.** **A)** DFI **B)** CEH
**C)** NPS **D)** ILO **விடை : D**

**விளக்கம் :**
$D \xrightarrow{+2} F \xrightarrow{+3} I$
$C \xrightarrow{+2} E \xrightarrow{+3} H$
$N \xrightarrow{+2} P \xrightarrow{+3} S$
ஆனால், $I \xrightarrow{+3} L \xrightarrow{+3} O$

**28.** **A)** BDW **B)** FHS
**C)** GIQ **D)** IKP **விடை : C**

**விளக்கம் :**
$B \xrightarrow{+2} D \xrightarrow{\text{எதிர்எழுத்து}} W$
$F \xrightarrow{+2} H \xrightarrow{\text{எதிர்எழுத்து}} S$
$I \xrightarrow{+2} K \xrightarrow{\text{எதிர்எழுத்து}} P$
$G \xrightarrow{+2} I \xrightarrow{\text{எதிர்எழுத்து}} \boxed{R}$
ஆனால் Q எனத் தவறாக அமைந்துள்ளது.

| ஆங்கில அகரவரிசையில் எதிரெதிர் எழுத்துகள் | |
|---|---|
| A - Z | H - S |
| B - Y | I - R |
| C - X | J - Q |
| D - W | K - P |
| E - V | L - O |
| F - U | M - N |
| G - T | |

**29.** **A)** GNIS **B)** ROUT
**C)** TSER **D)** TLAS **விடை : B**

**விளக்கம் :**
ஏனையவற்றில் எழுத்துகளைத் திருப்பி எழுதினால் பொருள் உள்ளது.
GNIS ⇒ SING
ROUT ⇒ TUOR (பொருள் கிடையாது)
TSER ⇒ REST
TLAS ⇒ SALT

**30.** **A)** T **B)** H
**C)** Q **D)** Z **விடை : C**

**விளக்கம் :**
$T \rightarrow 20$ ; $H \rightarrow 8$ ; $Z \rightarrow 26$ ; $Q \rightarrow 17$
ஆங்கில அகரவரிசையில் இரட்டைப்படை எண் வரிசையில் ஏனைய எழுத்துகள் அமைந்துள்ளன.

Directions (31 - 40) : **கீழ்க்கண்ட வினாக்களில் மாறுபாடான சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.**

**31.** **A)** கல்லீரல் **B)** நகம்
**C)** நுரையீரல் **D)** இதயம் **விடை : B**

**விளக்கம் :**
ஏனைய உறுப்புகளில் நரம்புகள் உள்ளன.



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

**32.** **A)** கல்லூரி – மாணவர்கள்
**B)** மருத்துவமனை – நோயாளிகள்
**C)** பேருந்துநிறுத்தம் – ஓட்டுநர்
**D)** மைதானம் – பார்வையாளர்கள் **விடை : C**

**விளக்கம் :**
மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது கல்லூரி
நோயாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்டது மருத்துவமனை
பார்வையாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது மைதானம்
பயணிகளுக்காக ஏற்படுத்தப்பட்டது பேருந்துநிறுத்தம்
ஆனால் ஓட்டுநர் எனத் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**33.** **A)** மெர்க்குரி **B)** காப்பர்
**C)** அலுமினியம் **D)** துத்தநாகம் **விடை : A**

**விளக்கம் :**
மெர்க்குரி மட்டுமே திரவநிலையிலுள்ள உலோகமாகும்.

**34.** **A)** சில்வர் **B)** ஸ்டீல்
**C)** காப்பர் **D)** தங்கம் **விடை : B**

**விளக்கம் :**
ஸ்டீல் (steel) மட்டுமே கலப்பு உலோகமாகும். ஏனையவை தூய உலோகங்களாகும்.

**35.** **A)** அருவி **B)** ஆறு
**C)** குளம் **D)** ஓடை **விடை : C**

**விளக்கம் :**
ஏனையவற்றில் நீரோட்டம் இருக்கும். குளத்தில் நீர் தேங்கியிருக்கும்.

**36.** **A)** சக்கரம் **B)** மோதிரம்
**C)** வளையல் **D)** தட்டு **விடை : D**

**விளக்கம் :**
ஏனைய பொருள்கள் உள்ளீடற்றவையாகும்.

**37.** **A)** CM **B)** MB
**C)** TB **D)** GB **விடை : A**

**விளக்கம் :**
ஏனையவை கணினி தகவல்கள்களின் (Computer data) அலகுகளாகும்.

**38.** **A)** கிலோகிராம் **B)** டன்
**C)** குவின்டால் **D)** லிட்டர் **விடை : D**

**விளக்கம் :**
ஏனையவை திடப்பொருள்களின் எடை அலகுகளாகும்.

**39.** **A)** Rocket **B)** Helicopter
**C)** Aeroplane **D)** Sub-marine
**விளக்கம் :** **விடை : D**
ஏனையவை ஆகாயப் போக்குவரத்து சாதனங்களாகும்.
Sub-marine $\longrightarrow$ நீரின் அடியில் செல்லக்கூடிய வாகனமாகும்.

**40.** **A)** Engine **B)** Horn
**C)** Fuel **D)** Gear **விடை : C**

**விளக்கம் :**
ஏனையவை வாகனத்தின் பாகங்களாகும். Fuel - என்பது வாகனத்தின் எரிபொருளாகும்.

**41.** **A)** UVWX **B)** SRQP
**C)** LKJI **D)** HGFE **விடை : A**

**விளக்கம் :**
$\boxed{U \xrightarrow{+1} V \xrightarrow{+1} W \xrightarrow{+1} X}$

$S \xrightarrow{-1} R \xrightarrow{-1} Q \xrightarrow{-1} P$

$L \xrightarrow{-1} K \xrightarrow{-1} J \xrightarrow{-1} I$

$H \xrightarrow{-1} G \xrightarrow{-1} F \xrightarrow{-1} E$

**42.** **A)** 2518 **B)** 3249
**C)** 2709 **D)** 8314 **விடை : C**

**விளக்கம் :**
$2709 \Rightarrow 27 = 3^3 ; 09 = 3^2$. ஏனையவை கன எண்கள் அல்ல.

**43.** **A)** 36 **B)** 66
**C)** 76 **D)** 56 **விடை : A**

**விளக்கம் :**
36 மட்டுமே வர்க்க எண் ஆகும். $6^2 = 36$

**44.** **A)** ZXVT **B)** SQOM
**C)** WUSP **D)** MKIG **விடை : C**

**விளக்கம் :**
$Z \xrightarrow{-2} X \xrightarrow{-2} V \xrightarrow{-2} T$

$S \xrightarrow{-2} Q \xrightarrow{-2} O \xrightarrow{-2} M$

$\boxed{W \xrightarrow{-2} U \xrightarrow{-2} S \xrightarrow{-3} P}$

$M \xrightarrow{-2} K \xrightarrow{-2} I \xrightarrow{-2} G$

**45.** **A)** (45, 18) **B)** (36, 27)
**C)** (23, 14) **D)** (82, 29) **விடை : D**

**விளக்கம் :**
$45 \Rightarrow 4 + 5 = 9 ; 18 \Rightarrow 1 + 8 = 9$
$36 \Rightarrow 3 + 6 = 9 ; 27 \Rightarrow 2 + 7 = 9$
$23 \Rightarrow 2 + 3 = 5 ; 14 \Rightarrow 1 + 4 = 5$
மேற்கண்ட மூன்று தொடர்களிலும் முதல் எண்ணின் கூட்டுத்தொகையும் இரண்டாம் எண்ணின் கூட்டுத்தொகையும் சமம். ஆனால்,
$82 \Rightarrow 8 + 2 = 10 ; 29 \Rightarrow 2 + 9 = 11$

**46.** **A)** NKM **B)** DAC
**C)** UTV **D)** IFH **விடை : C**

**விளக்கம் :**
$N \xrightarrow{-3} K \xrightarrow{+2} M$

$D \xrightarrow{-3} A \xrightarrow{+2} C$

$\boxed{U \xrightarrow{-1} T \xrightarrow{+2} V}$

$I \xrightarrow{-3} F \xrightarrow{+2} H$

**47.** **A)** முக்கோணம் **B)** கூம்பு
**C)** செவ்வகம் **D)** வட்டம் **விடை : B**

**விளக்கம் :**
கூம்பு முப்பரிமாணமுடைய வடிவம். ஏனையவை இருபரிமாணமுடைய வடிவங்கள்.

**48.** **A)** 4367 **B)** 3245
**C)** 6578 **D)** 7689 **விடை : A**

**விளக்கம் :**
$43\ 67 \Rightarrow 67 - 43 = \boxed{24}$
$32\ 45 \Rightarrow 45 - 32 = 13$
$65\ 78 \Rightarrow 78 - 65 = 13$
$76\ 89 \Rightarrow 89 - 76 = 13$

**49.** **A)** 16 : 128 **B)** 12 : 96
**C)** 13 : 117 **D)** 15 : 120 **விடை : C**

**விளக்கம் :**
$16 \times 8 = 128$ ; $12 \times 8 = 96$
$15 \times 8 = 120$ ; ஆனால், $13 \times 9 = 117$

**50.** **A)** SU **B)** BD
**C)** IK **D)** PN **விடை : D**

**விளக்கம் :**
$S \xrightarrow{+2} U$ ; $B \xrightarrow{+2} D$

$I \xrightarrow{+2} K$ ; $\boxed{P \xrightarrow{-2} N}$



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

**விளக்கம்:** பொருளின் வல மற்றும் இடப் பக்கங்கள் கண்ணாடி பிம்பத்தில் இட மற்றும் வலமாகவும் மேல் கீழ்ப் பகுதிகள் மாறாமலும் இருக்கும். எனவே **(C)** சரியான விடையாகும்.

**(எ.கா) 2.**



(F)



(A) (B) (C) (D)

**விளக்கம்:** பொருளின் வல மற்றும் இடப் பக்கங்கள் கண்ணாடி பிம்பத்தில் இட மற்றும் வலமாகவும் மேல் கீழ்ப் பகுதிகள் மாறாமலும் இருக்கும். எனவே **(A)** சரியான விடையாகும்.

| | | |
|---|---|---|
| LHS | – | இடக்கை பக்கம் |
| RHS | – | வலக்கை பக்கம் |
| UP | – | மேல் |
| DOWN | – | கீழ் |
| VARIABLE | – | மாறக்கூடியது |
| CONSTANT | – | நிலையானது |

## பயிற்சி வினாக்கள்

**Directions (Q. 1 to 15) :** "F" என்ற வரைபடத்தின் சரியான கண்ணாடி பிம்பத்தை தேர்வு செய்யவும்.

1.



(F)



(A) (B) (C) (D)

2.



(F)



(A) (B) (C) (D)

3.



(F)



(A) (B) (C) (D)

4.



(F)



(A) (B) (C) (D)

5.



(F)



(A) (B) (C) (D)

6.



(F)



(A) (B) (C) (D)

7.



(F)



(A) (B) (C) (D)

www.surabooks.com

SURA'S

8.



(F)



(A) (B) (C) (D)

9.



(F)



(A) (B) (C) (D)

10.



(F)



(A) (B) (C) (D)

11.



(F)



(A) (B) (C) (D)

12.



(F)



(A) (B) (C) (D)

13.



(F)



(A) (B) (C) (D)

14.



(F)



(A) (B) (C) (D)

15.



(F)



(A) (B) (C) (D)

**விடைகள்**

1. (C) 2. (D) 3. (C) 4. (B) 5. (C) 6. (D) 7. (B) 8.(A) 9. (D) 10. (B)
11. (C) 12. (C) 13. (D) 14. (C) 15. (A)

## நீர்ப் பிம்ப முறை

நீரில் தெரியும் பிம்பம் நீர்ப்பிம்பம் எனப்படுகிறது. 'நீர்ப் பிம்பம்' எனப்படுவது தலைகீழ் பிம்பம் ஆகும். இவ்வகையில் வினாக்களுக்கு ஏற்ற விடைகளை அளிக்கும் போது, இவற்றில் வலம், இடம் மாறாமலும் மேல் கீழ் நிலைகள் மாறும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.



www.surabooks.com





LHS UP ⇄ variable / constant RHS DOWN



LHS UP ⇄ variable / constant RHS DOWN



LHS UP ⇄ variable / constant RHS DOWN



LHS UP ⇄ variable / constant RHS DOWN



LHS UP ⇄ variable / constant RHS DOWN

**Directions :** 'F' என்ற வரைபடத்திற்கு ஏற்ற நீர்ப் பிம்பத்தைத் தேந்தெடுக்கவும்.

(எ.கா) 1.



(F)



(A) (B) (C) (D)

**விளக்கம்:** மேல், கீழ்நிலைகள் மாற்றமடைந்து வலம் இடம் மாறாமலிருக்கும். எனவே **(B)** சரியான விடையாகும்.

(எ.கா) 2.



(F)



(A) (B) (C) (D)

**விளக்கம்:** மேல், கீழ்நிலைகள் மாற்றமடைந்து வலம் இடம் மாறாமலிருக்கும். எனவே **(B)** சரியான விடையாகும்.

## பயிற்சி வினாக்கள்

**Directions (Q. 1 to 15) :** 'F' என்ற வரைபடத்திற்கு ஏற்ற நீர்ப்பிம்பத்தைத் தேந்தெடுக்கவும்.

**1.**



(F)



(A) (B) (C) (D)

**2.**



(F)



(A) (B) (C) (D)

**3.**



(F)



(A) (B) (C) (D)

**4.**





(A) (B) (C) (D)

**5.**



(F)



(A) (B) (C) (D)



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

www.surabooks.com



6.




7.




8.




9.




10.




11.




12.




13.




14.




15.




**விடைகள்**

1. (D) 2. (A) 3. (B) 4. (D) 5. (C) 6. (B) 7. (C) 8.(D) 9. (B) 10. (B)
11. (A) 12. (A) 13. (D) 14. (D) 15. (A)



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

# பொதுஅறிவு

வரலாறு ................................................ 02 - 35

புவியியல் ................................................ 36 - 61

இந்திய அரசியலமைப்பு ............................ 62 - 93

பொருளாதாரம் ........................................ 94 - 103

அறிவியல் ................................................ 104 - 160

- ❖ இயற்பியல் ............................................ 104 - 111
- ❖ வேதியியல் ............................................ 112 - 122
- ❖ தாவரவியல் ............................................ 123 - 133
- ❖ விலங்கியல் ............................................ 134 - 160

www.surabooks.com

# வரலாறு

## வரலாற்றுக்கு முந்தைய காலம்

இந்திய துணைக்கண்டத்தில் வாழ்ந்த பழங்கால மனிதர்கள் பல்வேறு செயல்களுக்கு கற்களை கருவிகளாகப் பயன்படுத்தினர். இது கற்காலம் எனப்படுகிறது. இதனை, மூன்றாகப் பிரிக்கலாம்.

1. **பழைய கற்காலம்** : கி.மு. 5 லட்சம் முதல் கி.மு. 9000 ஆண்டு வரை **(Paleolithic Age - Old Stone Age)**
2. **இடைக்கற்காலம்** : கி.மு. 9000 முதல் கி.மு. 4000 ஆண்டு வரை **(Mesolithic Age - Middle Stone Age)**
3. **புதிய கற்காலம்** : கி.மு. 4000 முதல் கி.மு. 1800 ஆண்டு வரை **(Neolithic Age - New Stone Age)**

**பூமியின் தோற்றம் : 460 கோடி ஆண்டுகளுக்கு முன்**
**மனிதனின் தோற்றம் (ஹோமோசெப்பியன்ஸ்) : 40,000 ஆண்டுகளுக்கு முன்**
**வேளாண்மை தோன்றிய காலம் : சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்**
**நகரங்களின் தோற்றம் – 4,700 ஆண்டுகளுக்கு முன்**

## சிந்து சமவெளி நாகரிகம்

❖ ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் வடமேற்கு இந்தியா ஆகிய பகுதிகளில் கி.மு. 2500 முதல் கி.மு. 1700 வரையிலான காலகட்டத்தில் (கார்பன் $C_{14}$ வயதுக் கணக்கீட்டின்படி) செழித்து வளர்ந்திருந்த ஒரு நாகரிகமே சிந்து சமவெளி நாகரிகமாகும். இது செம்பு அல்லது வெண்கல காலத்தினைச் சார்ந்தது.

**சிந்து சமவெளி நாகரிகத்தின் முக்கிய இறக்குமதிகள்**

| பொருள் | தருவிக்கப்பட்ட இடங்கள் |
|---|---|
| தங்கம் | கோலார், ஆப்கானிஸ்தான், ஈரான் |
| வெள்ளி | தென்னிந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான் |
| செம்பு | கேத்ரி (இராஜஸ்தான்), பலுச்சிஸ்தான், அரேபியா |
| டின் | ஆப்கானிஸ்தான், பீஹார் |

**சிந்து சமவெளி நாகரிக காலகட்டத்தினை மூன்றாக பிரிக்கலாம்**

| காலகட்டம் | காலம் | காணப்படும் இடங்கள் | குறிப்புகள் |
|---|---|---|---|
| சிந்துவெளி நாகரிகத்திற்கு முந்தைய காலகட்டம் (Pre-Harappan) | கி.மு. 2900–க்கு முன்பு | மெகர்கர் (கிழக்கு பலுச்சிஸ்தான்) | நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நிலையான வாழ்க்கையையும் வேளாண்மையையும் துவங்கினர். |
| தொடக்கநிலை (Early Phase) | கி.மு. 2900 முதல் கி.மு. 2500 வரை | ஆம்ரி, கோட்டிஜி | பெரிய கிராமங்களில் வசித்தனர். நகரங்கள் உருவாக ஆரம்பித்தன. |
| முதிர்ந்த / செழிப்பான நிலை (Mature Phase) | கி.மு. 2500 முதல் கி.மு. 2000 வரை | காலிபங்கன் (இராஜஸ்தான்) | பெரிய நகரங்கள் எழுச்சி பெற்றன. |
| இறுதிநிலை (Later Phase) | கி.மு. 2000 முதல் கி.மு. 1750 வரை | லோத்தல் (குஜராத்) | லோத்தல் நகரம் மற்றும் அதன் துறைமுகமும் இக்காலத்தில் நிறுவப்பட்டன. மெசபடோமியா மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளுடனான கடல்வழி வர்த்தகம் இதன் வழியே நடைபெற்றது. |

**சிந்துவெளி நகரங்கள் ஒரு பார்வை**

| நகரம் | அமைந்துள்ள மாகாணம் | நதிக்கரை | கண்டறியப்பட்ட வருடம் | கண்டறிந்தவர் | முக்கிய குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| ஹரப்பா | மேற்கு பஞ்சாப், பாகிஸ்தான் | ராவி | 1921 | தயாராம் சாஹ்னி | முதன்முதலாக கண்டறியப்பட்டது. **ஆதாரங்கள் :** 6 தானியக் களஞ்சியங்கள், தங்குமிடங்கள். புதையுண்ட நகரம். |
| மொகஞ்சதாரோ | சிந்து, பாகிஸ்தான் | சிந்து | 1922 | R.D. பானர்ஜி | **ஆதாரங்கள் :** கல்லறைமேடு, பெரிய நீச்சல் குளம், மிகப்பெரிய தானியக் களஞ்சியம், பருத்தி ஆடை, நடன மங்கை சிலை, பசுபதி முத்திரை, வெண்கல எருமை. |
| சுத்கோஜெண்டர் | பலூச்சிஸ்தான் | தாஸ்த் | 1929 | ஆரல் ஸ்டீன் | ஹரப்பா மற்றும் பாபிலோன் இடையிலான வர்த்தகமையம். |
| சங்குதாரோ | சிந்து | சிந்து | 1931 | N.G. மஜும்தார் | **ஆதாரங்கள் :** கோட்டைகளற்ற நகரம், மணி விற்கும் கடை, நாயின் கால்தடம், பூனையின் எச்சம். |
| ரங்பூர் | குஜராத் | பதுர் | 1931 | N.G. மஜும்தார் | – |
| லோத்தல் | குஜராத், காம்பே வளைகுடா | போகவா | 1953 | S.R. ராவ் | **ஆதாரங்கள் :** முதல் செயற்கைத் துறைமுகம், மணிகள் செய்யும் தொழிற்சாலை, பலிபீடம், சதுரங்க விளையாட்டு. |
| பனவாலி | ஹரியானா | காகர் | 1973 | R.S. பிஸ்த் | பார்லி, மணிகள் விற்கும் கடை. |
| ஆலம்கீர் | உத்திரப் பிரதேசம் | ஹிண்டோன் | 1974 | Y.D. ஷர்மா | – |



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

www.surabooks.com

www.surabooks.com



### உபவேதங்கள்

நான்கு முதன்மை வேதங்களின் துணை வேதங்கள் உபவேதங்கள் எனப்படுகின்றன.

| உபவேதம் மற்றும் வேதம் | துறை | உபவேதம் மற்றும் வேதம் | துறை |
|---|---|---|---|
| ஆயுர்வேதம் (ரிக்வேதம்) | மருத்துவம் | காந்தர்வ வேதம் (சாம வேதம்) | கலை மற்றும் இசை |
| தனுர்வேதம் (யஜுர் வேதம்) | போர்க்கலை | சில்பவேதம் (அதர்வண வேதம்) | கட்டடக் கலை |

### புராணங்கள்

அண்டத்தின் தோற்றம், புராணக்கதைகள், பல்வேறு மகத்தான மனிதர்கள், பழைய நம்பிக்கைகள், சட்ட விதிமுறைகள் மற்றும் பல்வேறு தலைப்புகளில் அமைந்தவை புராணங்களாகும். இவை மக்களின் வழிபாட்டு முறை பலியிடுதலிலிருந்து சிலை வழிபாட்டை நோக்கி நகர்ந்ததைக் குறிப்பிடுகின்றன.

**சூத்திரங்கள் :** சூத்திர இலக்கியம் மூன்று வகைப்படும்.

- ஸ்ரவுத சூத்திரம் (Srauda Sutra) – மாபெரும் பொது தானங்களுடன் தொடர்புடையது.
- கிரிஹ சூத்திரம் (Griha Sutra) – பிறப்பு, பெயர் வைத்தல் மற்றும் திருமணங்களுடன் தொடர்புடையது.
- தர்ம சூத்திரம் (Dharma Sutra) – சமூக மற்றும் உள்ளூர் நடைமுறைகளைக் கொண்டது.

### மகாபாரதம்

வேதவியாசரால் இயற்றப்பட்டது. முதலில் 880 செய்யுள்களைக் கொண்டிருந்த இது, பின்னர் 24000 செய்யுள்களைக் கொண்டதாக விரிவாக்கப்பட்டது. பிற்காலத்தில் மேலும் விரிவாக்கப்பட்டு 1 லட்சம் பாடல்களைக் கொண்டதாக மாற்றப்பட்டது.

#### தத்துவங்கள்

**இந்து சமயத்தின் ஆறு தத்துவ முறைகள் பழங்கால இந்தியாவின் ஆறு தத்துவஞானிகளால் அருளப்பட்டன. அவை,**

| தத்துவம் | அருளியவர் |
|---|---|
| நியாயா | கௌதமர் |
| சாங்கியா | கபிலர் |
| பூர்வமீமாம்சா | ஜெய்மினி |
| வைஷேஷிகா | கன்னடர் |
| யோகா | பதஞ்சலி |
| உத்திரமீமாம்சா | வியாசர் |

### இராமாயணம்

வால்மீகியால் இயற்றப்பட்டது. ஆரம்பத்தில் இதில் 6000 செய்யுள்கள் இருந்தன. தற்பொழுது 24 ஆயிரம் செய்யுள்கள் உள்ளன.

### ஸ்மிருதிகள்

தர்ம சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் எனப்படுகின்றன. இவை ஸ்லோக வடிவில் இயற்றப்பட்ட சட்ட நூல்களாகும். இவற்றில் மானவ் தர்ம சாஸ்திரம் எனப்படும் மனு தர்மம் காலத்தால் முற்பட்டதாகும். இதனை இயற்றிய மனு முதலாவது அரசராகவும் சட்டம் இயற்றுபவராகவும் இருந்திருக்கலாம்.

இது தவிர விஷ்ணு தர்ம சாஸ்த்திரம், யஜ்னவல்யா மற்றும் நாரத ஸ்மிருதி போன்றவையும் இயற்றப்பட்டன. மித்தாக்ஷரா என்பது பின்னாட்களில் இயற்றப்பட்ட சிறிய ஸ்மிருதியாகும்.

### உபநிடதங்கள்

உபநிடதம் என்பதற்கு குருவின் அருகிலிருந்து கற்றுக்கொள்ளுதல் என்று பொருள். இது வேதரிதா என்றும் அழைக்கப்படுகின்றது. இவை வேதகாலத்தின் இறுதி காலகட்டத்தினைக் குறிக்கின்றன.

ஆன்மிகம் மற்றும் தத்துவம் சார்ந்த இவை வேதங்களின் நோக்கத்தினை வெளிப்படுத்துகின்றன. கர்மா, ஆத்மா, பிரம்மா மற்றும் பிரபஞ்சத்தின் தோற்றம் உள்ளிட்டவற்றைப் பற்றி வரையறுக்கின்றன.

இவை கி.மு. 800 முதல் கி.மு. 500 வரை தொகுக்கப்பட்டன. மொத்தம் 108 உபநிடதங்கள் உள்ளன. இவற்றில் 11 உபநிடதங்கள் மிக முக்கியமானவையாகும்.

### பிரமாணங்கள்

- வேதங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு பாடல்களுக்கான உரைகள் பிரமாணங்கள் எனப்படும். இவை வேதங்களை ஐதீகமான முறையில் விளக்குகின்றன. வேத துதி பாடல்களிலுள்ள மறை பொருள்களை விளக்குகின்றன. இயல்பிலேயே இவை சம்பிரதாயம் மிக்கவை.
- இவற்றுள் மிகமுக்கியமானது யஜுர் வேதத்துடன் இணைந்த சதபத பிரமாணமாகும். இது 100 புனிதமான வழிகளைக் கூறுகின்றது.

### ஆரண்யங்கள்

- வனங்களில் வசித்த துறவிகள் தங்களது சீடர்களுக்கு எளிதாக விளங்கும், புரியும் வகையில் வேதங்களுக்கான உரைகளை எழுதினர். இவையே ஆரண்யங்களாகும்.
- இவை தியானம் மற்றும் வேதாந்தத்தைப் பற்றியவை. பூஜை புனஸ்காரங்களுக்கு எதிரானவை. வனங்களில் வாழும் ரிஷிகளின் வாழ்க்கையைப் பற்றியும் விவரிக்கின்றன. இவை பிரமாணங்களின் முடிவுரையாகக் கருதப்படுகிறது.

### வேதாங்கங்கள்

இவை வேதங்களின் விழுதுகள் எனப்படுகின்றன. இவை கலை மற்றும் அறிவியலின் கலவையாகும். மொத்தம் 6 வேதாங்கங்கள் உள்ளன. இவை வேதங்களின் முடிவுரை எனப்படுகின்றன. கி.மு. 4–ஆம் நூற்றாண்டில் பாணினி, அஷ்டத்யாயி வியாகர்ணா பற்றிய நூலை இயற்றினார்.

| வேதாங்கம் | தொடர்புடையது (Deals with) | வேதாங்கம் | தொடர்புடையது (Deals with) |
|---|---|---|---|
| சிக்ஷா | உச்சரிப்பு (Phonetics) | நிருக்தா | சொற்பிறப்பு (Etymology) |
| கல்பா | பூஜை (Rituals) | சந்தா | அளவுகள் (Metrics) |
| வியாக்கரணா | இலக்கணம் | ஜோதிஷா | ஜோதிடம் |

## மகதத்தை ஆட்சி செய்த வம்சங்கள்

**ஹரியங்க வம்சம் :** பிம்பிசாரன் (கி.மு. 546 – கி.மு. 494), அஜாதசத்ரு (கி.மு. 494 – கி.மு. 462) – உதயன்.

**சிசுநாக வம்சம் (கி.மு. 412 – கி.மு. 344) :** சிசுநாகன், காலசோகன்.

**நந்த வம்சம் (கி.மு. 344 – கி.மு. 323) :** மகாபத்ம நந்தர், தன நந்தர்.

**16 மகாஜனபதங்கள்**

**குடியரசுகள் : கம்போஜம், குரு, ராமகிராமம், மல்லா, மோரியா (பிப்லிலவனா), சாக்கியா (கபிலவஸ்து), வஜ்ஜி (பாஞ்சாலம்), லிச்சாவி (வைசாலி), விதேகம் (மிதிலை).**

**முடியரசுகள் : அங்கம், அவந்தி, சேதி, காசி, கோசலம், காந்தாரம், மகதம், மத்சயம், சூரசேனா, வத்சா.**

## பாரசீக - கிரேக்க படையெடுப்புகள்

**பாரசீக படையெடுப்புகள் :** சைரஸ் (கி.மு. 558 – கி.மு. 530), முதலாம் டேரியஸ் (கி.மு. 522 – கி.மு. 486), செர்க்ஸஸ் (கி.மு. 465 – கி.மு. 456).

**கிரேக்கர் :** அலெக்சாந்தர் (கி.மு. 327 – கி.மு. 325)

**ஆசிரமங்கள்**

1. **பிரம்மச்சரியம் (அல்லது) மாணவப் பருவம்.**
2. **கிரகஸ்தம் (அல்லது) வீட்டுத் தலைவன் மற்றும் கணவன் என்ற நிலை.**
3. **வனப்பிரஸ்தம் (அல்லது) காட்டில் வசிக்கும் துறவு நிலை.**
4. **சன்னியாசம் (அல்லது) முற்றும் துறந்த நிலை.**



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

சிறந்த எடுத்துக்காட்டு, ஐஹோலேவில் (Aihole)அமைந்துள்ள சாளுக்கியர் கால கோயில்கள் ஆகும்.

## இந்திய சிற்பக் கலைகள்

### காந்தாரக்கலை

கனிஷ்கரின் காலத்தில் தோன்றிய காந்தாரக்கலையானது, இந்திய மற்றும் கிரேக்க ரோமானியக் கலைகளின் கலவையாகும். இக்கலையின் மூலம் மனித வடிவத்தை அதன் தசைகள் சிகை மற்றும் ஆடை மடிப்புகள் தெரியும்படி சிலைகளாக உருவாக்கப்பட்டன. இச்சிலைகளை செதுக்க கருப்புக்கற்கள் பயன்படுத்தப்பட்டன. இக்கலையைப் பயன்படுத்தி வடிக்கப்பட்ட சிற்பங்கள் தட்சசீலம், பெஷாவர் மற்றும் வடமேற்கு இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கலையின் மூலம் புத்தரது சிலைகள் மட்டுமே செதுக்கப்பட்டன.

### மதுரா கலைப்பாணி

தற்போதைய உத்திரப்பிரதேசத்தின் மதுரா எனும் இடத்தில் உள்நாட்டு கலைநயத்துடன் கி.பி. முதலாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்தது மதுரா கலைப்பாணி. இக்கலையைப் பயன்படுத்தி செதுக்கப்பட்ட சிலைகளின் முகங்களில் ஆன்மிகப் பொலிவு நிறைந்திருந்தது. இவை **சிவப்பு புள்ளிகளுடைய மணற்கற்களைப்** பயன்படுத்தி உருவாக்கப்பட்டன. புத்தரின் உருவத்துடன், சிவன்–பார்வதி, விஷ்ணு–லட்சுமி, யஷினிகள், அப்சரஸ்கள் போன்ற உருவங்களும் செதுக்கப்பட்டன.

### அமராவதி கலைப்பாணி

தற்போதைய ஆந்திரப்பிரதேசத்தின் புதிய தலைநகராக உருவாக்கப்படும் அமராவதியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாதவாகனர்களின் ஆட்சியில் தோன்றி வளர்ந்த சிற்பக்கலைப்பாணியே அமராவதி கலைப்பாணியாகும். இதில் சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்தி புத்தரின் உருவங்கள் செதுக்கப்பட்டன. நாகார்ஜுன கொண்டா மற்றும் ஜக்கையா பேட்டை ஆகிய இடங்களிலும் இக்கலை சிறப்புடன் திகழ்ந்தது.

## இந்திய ஓவியக்கலைகள்

❖ இந்தியாவின் வரலாறு துவங்கிய காலகட்டம் முதலே இந்திய ஓவியக்கலையும் துவங்கிவிடுகின்றது. குகை ஓவியங்களிலிருந்து இந்திய ஓவியக்கலையின் வரலாறு துவங்குகிறது.

### முகலாய பாணி

இது தெற்காசிய ஓவிய பாணி எனும் குறிப்பிட்ட தனித்துவ பாணியைக் கொண்டது. வழக்கமாக இது சிறிய வடிவங்களில் (Miniatures) வரையப்படும். இந்த மினியேச்சர் ஓவிய பாணி பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்தது. இதில் இந்து, பௌத்தம் மற்றும் சமணத்தின் தாக்கங்கள் காணப்பட்டன. இது முகலாயர் ஆட்சிக்காலத்தில் மகோன்னத நிலையை அடைந்தது. அதன்பிறகு இதர இஸ்லாமிய அரசுகளுக்கும் பரவியது. இறுதியாக இந்து மற்றும் சீக்கிய அரசர்களும் இதனை மேம்படுத்தினர். அக்பர் மற்றும் ஜஹாங்கீர் ஓவியக்கலைக்கு மாபெரும் ஆதரவு அளித்தனர். முகலாய பாணி ஓவியக்கலையானது அரண்மனைக் காட்சிகள் அரசர்களின் உருவப்படங்கள், வேட்டையாடும் காட்சிகள், காதலர்கள், போர்க்கள காட்சிகள் ஆகியவற்றை மையக் கருத்துகளாகக் கொண்டு வரையப்பட்டன.

### இராஜபுத்திர பாணி

இது 18–ஆம் நூற்றாண்டு இராஜபுத்திர அரசுகளின் ஆதரவால் வளர்ந்தது. இதில் முகலாய பாணியின் தாக்கம் வெகுவாக இருந்தது.

✦ ஒவ்வொரு இராஜபுத்திர அரசுகளும் தங்களுக்கென ஒரு சிறப்பு பாணி ஓவியக்கலையை கையாண்டன. ஆனால் அனைத்திலும் பொதுவான அம்சங்கள் நிறைந்திருந்தன. நிலத்தோற்றங்கள், மகாபாரத, இராமாயணக் காட்சிகள், கிருஷ்ணரின் வாழ்க்கை, மனித வாழ்வு ஆகியவை இதன் மையக்கருத்துகளாகும்.

### வங்காள பாணி

இது 20–ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் வளர்ச்சியடைந்தது. பிரிட்டிஷ் கலை நிர்வாகம் இந்த ஓவிய பாணிக்கு ஆதரவு அளித்து மேம்படுத்தியது. இந்த ஓவியப்பாணி இந்திய தேசியவாதத்தினை மையப்படுத்தி அதனைத் தூண்டியது. இராஜா ரவிவர்மா, அபனிந்தரநாத் தாகூர் ஆகியோர் இப்பாணியில் முன்னோடிகளாவர். நீலமா தத்தா, சுதிர்ராய், பரேஷ் மைத்ரி மற்றும் விகாஷ் பட்டாச்சார்ஜி ஆகியோர் இப்பாணியில் புகழ்பெற்ற தற்கால கலைஞர்களாவர்.

### இந்திய ஓவியங்கள்

| ஓவியம் | அமைவிடம் |
|---|---|
| வரலாற்றுக்கு முந்தைய ஓவியங்கள் | பிம்பேட்கா, ஜோகிமாரா, ஆடம்கர், மிர்சாபூர், குப்பகுல்லு |
| குகை ஓவியங்கள் | அஜந்தா, பாக், சித்தன்னவாசல் பாலா |
| ஓவியங்கள் | வங்காளம் |
| ஹைதராபாத் ஓவியங்கள் | பிஜப்பூர்ரி |
| லெபாக்ஷி ஓவியங்கள் | விஜய நகரம் |
| மேவார் ஓவியங்கள் | குஜராத் |
| மார்வார் ஓவியங்கள் | ஜோத்பூர் மற்றும் நகூர் (இராஜஸ்தான்) |
| கிஷ்ணாகர் ஓவியங்கள் | இராஜஸ்தான் |
| ஹைதராபாத் ஓவியங்கள் | பிஜப்பூர் |
| தஞ்சாவூர் ஓவியங்கள் | தஞ்சாவூர் |
| மதுபானி, ரகுராஜ்பூர் ஓவியங்கள் | ஒடிசா |
| பித்தோரோ ஓவியங்கள் | குஜராத் |
| அபபிரம்மா ஓவியங்கள் | குஜராத் |
| முகலாயர் ஓவியங்கள் | புதுடெல்லி மற்றும் இந்தியாவின் சில பகுதிகள் |
| தஞ்சை கண்ணாடி ஓவியங்கள் | மைசூர் மற்றும் தஞ்சாவூர் |

### கலாச்சார பாரம்பரியங்கள்

| இடம் | மாநிலம் | இடம் | மாநிலம் |
|---|---|---|---|
| மகாபோதி ஆலயம் | பீகார் | சத்திரபதி சிவாஜி இரயில் முனையம் | மகாராஷ்டிரம் |
| செங்கோட்டை | டெல்லி | அஜந்தா குகைகள் | மகாராஷ்டிரம் |
| குதுப்மினார் | டெல்லி | எல்லோரா குகைகள் | மகாராஷ்டிரம் |
| ஹுமாயூன் கல்லறை | டெல்லி | எலிபெண்டா குகைகள் | மகாராஷ்டிரம் |
| சாம்பனேர் தொல்லியல் பூங்கா | குஜராத் | சாஞ்சி ஸ்தூபி, கஜிராஹோ, பிம்பேட்கா பாறைக் குகைகள் | மத்தியப்பிரதேசம் |
| கோவாவின் பழைய தேவாலயங்கள் | கோவா | கோனார்க் சூரிய கோவில் | ஒடிஷா |
| ஜந்தர் மந்தர் | ஜெய்ப்பூர் | மகாபலிபுரம், சோழர்களின் கோவில்கள் | தமிழ்நாடு |
| ஹம்பி | கர்நாடகம் | ஆக்ரா கோட்டை, தாஜ்மகால், பதேபூர் சிக்ரி | உத்திரப்பிரதேசம் |
| பட்டாடக்கல் | கர்நாடகம் | மலை இரயில் | டார்ஜிலிங், மேற்குவங்கம் |



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

# புவியியல்

**புவியியலின் பிரிவுகள் (Branches of Geography)**

புவியியலை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **இயல் புவியியல்** (Physical geography)
2. **மானுட புவியியல்** (Human geography)

## பேரண்டம் (Universe)

பேரண்டம் பற்றிய படிப்பு 'காஸ்மாலஜி' (Cosmology) என்றழைக்கப்படுகிறது. பேரண்டம் என்பது இலட்சக்கணக்கான அண்டங்களைக் கொண்டது. ஒவ்வோர் அண்டமும் சூரியனைப் போன்ற இலட்சக்கணக்கான நட்சத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு நட்சத்திரமும் புவியைப் போன்ற பல கோள்களைக் கொண்டது. பெரும்பாலான கோள்கள் நிலவினைப் போன்ற துணைக்கோள்களைக் கொண்டவை. இவை தவிர, பல விண்பொருட்களும் இப்பேரண்டத்தில் உள்ளன.

**பேரண்டம்**
↓
**எண்ணற்ற அண்டங்கள்**
↓
**எண்ணற்ற நட்சத்திரங்கள்**
↓
**ஏராளமான கிரகங்கள்**
↓
**சில துணைக்கோள்கள் மற்றும் விண்பொருட்கள்**

### பேரண்டத்தின் தோற்றம் பற்றியக் கொள்கைகள்

**பெருவெடிப்புக் கொள்கை (Big Bang Theory)**

**முன்மொழிவு :** ஜார்ஜ் லாமெட்ரே

**சாராம்சம் :** 13.7 பில்லியன் வருடங்களுக்கு முன்பு அதிக அடர்த்தி, தீவிர வெப்பநிலை மற்றும் கட்டற்ற அழுத்தம் மிகுந்த ஒரு புள்ளியில் ஏற்பட்ட பெருவெடிப்பிலிருந்து (Big Bang) பேரண்டம் தோன்றியது .

**நிலைமாறாக் கொள்கை (Steady State Theory)**

**முன்மொழிவு :** போன்டி, கோல்ட் மற்றும் ஃபிரெட் ஹோல்லி

**சாராம்சம் :** பேரண்டம் விரிவடைந்து கொண்டே செல்கின்றது. பேரண்டத்திற்கு துவக்கமோ முடிவோ இல்லை.

**துடிப்புக் கொள்கை (Pulsating Theory)**

**சாராம்சம் :** பேரண்டமானது விரிவடையும் அல்லது சுருங்கும். தற்பொழுது பேரண்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

## அண்டம் (Galaxy)

✦ நமது சூரியக் குடும்பம் பால்வழி அண்டத்தில் (ஆகாய கங்கை) அமைந்துள்ளது.

✦ பால்வழி அண்டம் சுருள் வடிவமுடையது.

✦ பால்வழி அண்டத்திற்கு அருகாமையில் உள்ள மற்றோர் அண்டம் ஆண்ட்ரமீடா ஆகும்.

### நட்சத்திரம் (Stars)

✦ நட்சத்திரங்கள் வெப்பமான எரியும் வாயுக்களாலானவை. இவற்றிற்கு சுயமாக ஒளிரும் தன்மையுண்டு. (எ.கா – சூரியன்).

✦ நட்சத்திரங்கள் சூரியனை விட சிறியதாகவோ, பெரியதாகவோ, அதே அளவுடையதாகவோ இருக்கும். ஆனால் சூரியனைவிட 1.44 மடங்குக்கும் அதிக நிறையைக் கொண்டிருக்காது. அவ்வாறு கொண்டிருந்தால் அவை நியூட்ரான் நட்சத்திரங்களாக (அ) பல்சார்களாக மாறிவிடும். நட்சத்திரத்தின் நிறமானது அதன் மேற்புற வெப்பநிலையைச் சுட்டிக் காட்டுகின்றது. இதில் நீலநிறம் அதிகபட்ச வெப்பநிலையைக் குறிக்கின்றது. மஞ்சள் நிறம் நீலத்தைவிட குறைந்த வெப்பநிலையையும் சிவப்பு அதைவிடக் குறைவான வெப்பநிலையையும் குறிக்கின்றது. இவை சூப்பர்நோவா எனும் நட்சத்திர வெடிப்பினால் உருவாகின்றன.

**சில முக்கிய புவியிலாளர்கள்**

➢ **எராடோஸ்தென்ஸ்(Eratosthenes)** – புவியின் சுற்றளவையும் புவி அச்சின் சாய்வையும் முதன்முதலாகக் கண்டறிந்தவர்.

➢ **அனாஸிமாண்டெர்(Anaximander)** – முதன்முதலில் உலகவரைபடத்தை உருவாக்கியவர்

➢ **அயன்வில்லே(Ainville)** – முதன்முதலில் இந்திய வரைபடத்தை உருவாக்கியவர்.

➢ **தாலமி (Ptolemy)** – உலக வரைபடத்தில் இந்தியாவையும் இணைத்து வரைந்தவர்.

➢ **பிரடெரிக் ரட்ஸெல்(Fredrich Ratzel)** – மானுட புவியியலை (Anthropo geography) துவங்கியவர்.

### நட்சத்திரங்களின் மூன்று நிலைகள்

**நிலை 1 – புரோட்டோ நட்சத்திரம்**

ஹீலியத்தினை மிகுதியாகக் கொண்ட நட்சத்திரத்தின் மையப்பகுதி தன்னைச்சுற்றி அடுக்குகளை (Layer) உருவாக்கும் ஆரம்பநிலை. இது ஒரு நட்சத்திரத்தின் துவக்க நிலையாகும்.

**நிலை 2 – சிவப்பு இராட்சதன் (Red Giant)**

நட்சத்திரத்தின் வெளிப்புற அடுக்குகள் தோன்றி தனது அதிகபட்ச உருவத்தை அடையும் நிலை. இது நட்சத்திர ஆயுளின் நடுப்பகுதியாகும்.

**நிலை 3 – வெள்ளைக் குள்ளன் (White Dwarf)**

தனது முழு சக்தியையும் இழந்து குளிர்வடைந்து, சுருங்கும் நிலையிலான நட்சத்திரம். இது நட்சத்திரத்தின் இறுதிக் கட்டம். இதன்பிறகு நட்சத்திரம் சிதைந்துவிடும்.

### சந்திரசேகர் எல்லை

இந்திய இயற்பியலாளரான சந்திரசேகரின் கருத்துப்படி, சூரியனின் எடையை விட 1.44 மடங்கு கூடுதலான எடையுள்ள நட்சத்திரங்கள் சுருங்கும் அல்லது வெடிக்கும். இந்த அளவு சந்திரசேகர் எல்லை **(Chandrasekar Limit)** எனப்படும்.

**சந்திரசேகர் எல்லையைக் கடப்பதால்,**

✦ **வெடிக்கும் நட்சத்திரங்கள்:** நியூட்ரான் நட்சத்திரத்தினை (அ) பல்சாரினை உருவாக்கும்.

✦ **சுருங்கும் நட்சத்திரங்கள்:** ஈர்ப்புவிசை மிகுந்த ஒளி உட்பட அனைத்தையும் தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் கருந்துளைகளை (Black hole) உருவாக்கும்.

### வானியலில் தூரத்தினை அளவிடப் பயன்படும் சில அலகுகள் :

✦ **ஒளி வருடம் (Light Year) :**

ஒளி ஒரு வருடத்தில் பயணிக்கும் தொலைவு ஓர் ஒளி வருடம் எனப்படும். இது $9.461 \times 10^{12}$ கி.மீ.களுக்குச் சமமானது.



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

www.surabooks.com



| கனிமம் | கிடைக்குமிடம் |
|---|---|
| டோலமைட் | மத்தியப்பிரதேசம் (இந்தியாவின் 90 சதவிகித டோலமைட் தாது இங்கு கிடைக்கின்றது), சத்தீஸ்கர், ஒடிசா, குஜராத், கர்நாடகம், மேற்கு வங்கம். |
| ஆஸ்பெஸ்டாஸ் | இராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் (உலகின் 60 சதவிகித ஆஸ்பெஸ்டாஸ் தாது இந்தியாவிலேயே உள்ளது) |
| ஜிப்சம் | இராஜஸ்தான், ஜம்மு – காஷ்மீர் |
| கிராபைட் | ஒடிசா, பீஹார் |
| மைக்கா | ஜார்கண்ட் (கோடெர்மா), பீகார் (மாங்கர்), ஆந்திரப்பிரதேசம் (நெல்லூர்) |
| நிலக்கரி | ஜார்கண்ட், மேற்குவங்கம், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், சிங்கரேணி |
| லிக்னைட் | தமிழ்நாடு, அசாம் |

**அணுசக்தி கனிமங்கள்**

| கனிமம் | கிடைக்குமிடம் |
|---|---|
| யுரேனியம் | ஜார்கண்ட் (ஜடுகுடா), பீகார், உத்திரப்பிரதேசம் இவை தவிர கேரளத்தின் கடற்கரைப் பகுதிகளில் மோனோசைட் தாதுவாகக் கிடைக்கின்றது. |
| தோரியம் (மோனோசைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது) | கேரளம், தமிழ்நாடு, ஜார்கண்ட், இராஜஸ்தான் |
| லித்தியம் | ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் (லிப்போடோலைட் தாதுவாகக் கிடைக்கின்றது) |
| ஜிர்க்கோனியம் | கேரள கடற்கரை, ராஞ்சி, ஹசாரிபாக் |
| பெரிலியம் | ஆந்திரப்பிரதேசம் (நெல்லூர்), சிக்கிம், ஜம்மு–காஷ்மீர் |
| ஆண்டிமணி | இமாச்சலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் |
| இல்மனைட் | கேரளம் மற்றும் தமிழகக் கடற்கரைகள் |

# இந்திய தொழிற்சாலைகள்

| தொழிற்சாலைகள் | குறிப்புகள் |
|---|---|
| பருத்தி தொழிற்சாலை | ❑ இந்தியாவின் முதலாவது பருத்தி ஆலை, 1854–இல் பம்பாயில் துவங்கப்பட்டது.<br>❑ மும்பை இந்தியாவின் காட்டனோபோலிஸ் என்றழைக்கப்படுகின்றது.<br>❑ மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுகின்றது.<br>❑ கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுகின்றது.<br>❑ கான்பூர் உத்திரப்பிரதேசத்தின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுகின்றது. |
| கம்பளி தொழிற்சாலை | ❑ 1876–இல் முதலாவது கம்பளி தொழிற்சாலை கான்பூரில் நிறுவப்பட்டது. கம்பளி கைவினைப் பொருட்களில் ஜம்மு–காஷ்மீர் மாநிலம் முதலிடத்திலுள்ளது. |
| சணல் தொழிற்சாலை | ❑ ரிஷ்ரா எனுமிடத்தில் 1855–ஆம் ஆண்டில் இந்தியாவின் முதலாவது சணல் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.<br>❑ உலகளாவிய சணல் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஏற்றுமதியில் வங்கதேசத்தையடுத்து இரண்டாமிடத்தில் உள்ளது. |
| பட்டு தொழிற்சாலை | ❑ உலகளாவிய பட்டு உற்பத்தியில் சீனாவையடுத்து இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது.<br>❑ மல்பெரி, தசார், எரி மற்றும் முகா என நான்கு வகைப் பட்டுக்களையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடு இந்தியாதான். கர்நாடகம் முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்குவங்கம், பீகார் போன்றவை அடுத்தடுத்த இடம் பிடித்துள்ளன. |
| இரப்பர் தொழிற்சாலை | ❑ இந்தியாவின் முதலாவது செயற்கை இரப்பர் தொழிற்சாலை பரெய்லியில் துவங்கப்பட்டது. பரெய்லி, பரோடா, மும்பை, அகமதாபாத், அமிர்தசரஸ் போன்ற இடங்களில் இரப்பர் தொழிற்சாலைகள் உள்ளன. |
| தேயிலை தொழிற்சாலை | ❑ இந்தியாவில் தேயிலை பயிரிடல் 19–ஆம் நூற்றாண்டில் டார்ஜிலிங், அசாம் மற்றும் நீலகிரியில் துவங்கியது.<br>❑ தேயிலை உற்பத்தியில் அசாம், தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. |
| சர்க்கரை தொழிற்சாலை | ❑ இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில் உத்திரப்பிரதேசம் முதலிடம் பிடித்துள்ளது. |
| காகித தொழிற்சாலை | ❑ 1812–ஆம் ஆண்டில் முதலாவது காகித தொழிற்சாலை வங்காளத்தின் செராம்பூரில் நிறுவப்பட்டது. |
| உரத் தொழிற்சாலை | ❑ இந்திய உரக்கழகம் (FCI) 1961–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.<br>❑ தேசிய உரக்கழகம் (NFL) 1974–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. |



https://t.me/suraguides Ph: 9840455556 / 9940411204

# இந்திய அரசியலமைப்பு

## இந்திய அரசியல் நிர்ணய சபை

எம்.என். ராய் அவர்கள் இந்தியாவிற்கென ஒரு தனி அரசியலமைப்பு வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் 1934–ஆம் ஆண்டில் முன்வைத்தார். இதனை சுயராஜ்ஜிய கட்சியும் ஆமோதித்தது. இதனைத் தொடர்ந்து 1935–ஆம் ஆண்டில் இந்தியாவிற்கென ஒரு தனி அரசியலமைப்பு எனும் கோரிக்கை இந்திய தேசிய காங்கிரஸாலும் முன் வைக்கப்பட்டது. இக்கோரிக்கை 1940–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட '**ஆகஸ்ட் சலுகை**'யில் ஏற்கப்பட்டது. 1942–இல் அமைக்கப்பட்ட **கிரிப்ஸ் தூதுக்குழு** இந்திய அரசியலமைப்பு தொடர்பான பணிகளை இந்தியர்களிடமே விட்டுவிடலாம் எனப் பரிந்துரைத்தது. 1946–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் அமைச்சரவை தூதுக்குழு திட்டப்படி இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியல் நிர்ணய சபையானது பகுதியளவு மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் பகுதியளவு நியமன உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிப்பகுதியில் 10 லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி எனும் விகிதப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையிலும் மன்னராட்சிப் பகுதிகளின் அளவிற்கேற்ப நியமன உறுப்பினர்கள் மூலமும் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். அரசியல் சாசன நிர்ணய சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 389 ஆகும். இதில் 296 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். 93 இடங்கள் சுதேசி மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால், சுதேசிமாகாணங்கள் உறுப்பினர்களை நியமிக்காமல் அரசியல் நிர்ணய சபையை புறக்கணித்தன. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட 296 இடங்களில் 292 பேர் மாகாண சட்டசபைகளின் மூலமும் எஞ்சிய 4 நபர்கள் தலைமை ஆணையராலும் நியமிக்கப்பட்டனர். இந்த 4 உறுப்பினர்களும் தலைமை ஆளுநரின் நேரடி கட்டுப்பாட்டுப் பகுதிகளான கூர்க், டெல்லி, அஜ்மீர்–மேவார் மற்றும் பலுச்சிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தினர். 1946 நவம்பர் மாதத்தில் இந்திய அரசியல் நிர்ணய சபை முழுமை பெற்றது.

### இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையில் இட ஒதுக்கீடு

| வ.எண் | பகுதிகள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் | 292 |
| 2. | சுதேசி மாகாணங்கள் | 93 |
| 3. | தலைமை ஆளுநரின் கட்டுப்பாட்டு பகுதிகள் | 4 |

இச்சபையின் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9 அன்று நடைபெற்றது. இதில் 211 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். முஸ்லீம்லீக் இக்கூட்டத்தினை முழுமையாக புறக்கணித்தது. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி அவர்கள் டாக்டர் சச்சிதானந்த சின்ஹாவை தற்காலிகத் தலைவராகத் தலைமையேற்று நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

1946 டிசம்பர் 11 அன்று இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தரத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

